# புகழ்ச்சிக்கூட்டநற்செய்தி

2017 ஆவணிமாதம் 07ம்திகதி முதல் ஆவணிமாதம் 13ம் திகதிவரை

## *“ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது”*

01. புகழ்ச்சிக்காக

- மகத்துவமிக்க இறை ஆண்டவர் மனிதனுடைய படைப்பாளர் என்ற படியினால், மனிதனுடைய வாழ்வு அவரது பரிசுத்தமான கரங்களிலேயே ஆகும். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் ஏதோ விதத்தில் படைப்பாளரின் முன்னிலையில் ஏழ்மையானவனே.
- எமது தாழ்மையை ஏற்றுக் கொண்டு அவர் எமது இறை ஆண்டவர் என்ற படியினால் வந்தனையும், நமஸ்காரமும் செலுத்தியவாறு சாதாலமான அன்பானவரைப் புகழ்வோம்.
- நான் ஆண்டவரைப் பற்றிப் பெருமையாகப் பேசுவேன். எளியோர் இதைக் கேட்டு அக்களிப்பர். (திருப்பாடல் 34:2)
- புபுது பாடல் இல 229 “என் ஆன்மாஆண்டவரை……”

02. கடந்தவார அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வோம்.

- கடந்த வாரம் முழுவதும் நீங்கள் அனுபவித்த இறை ஆண்டவரின் பரிசுத்தமான அன்பின் துளியை மற்றவர்களுடன் பகிர்ந்துக் கொள்ளுங்கள். “பரிசுத்த அன்பு” என்பது மாறுபட்ட வித்தியாசமான அன்பாகும்.

02. வாரத்திற்கான நற்செய்தி

- எளிய மனதோர் தமது முழு விசுவாசத்தையும் இறைவன் பால் மாத்திரம் செலுத்தி அவரது பரிசுத்தமான திருவுளத்திற்கு அடிபணிவார்கள். அதன் வழியாக அவரது பரிசுத்தமானஅன்பிற்கு, நிர்வாகத்திற்கு அடிபணிந்தவாறு அவரில் தங்கிவாழும் வாழ்கை வாழ்வார்கள். அன்பை சுவைப்பார்கள். இறை அரசை உரிமையாக்கிக் கொள்வார்கள்.
- புனித மத்தேயு 19:16-22 (செல்வாரன இளைஞன்)
  அப்பொழுது ஒருவர் இயேசுவிடம் வந்து போதகரே நிலை வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டார். இயேசு அவரிடம் ……….நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். ……பின்பு வந்து என்னை பின்பற்றுங்கள்.
- இவ் வேதாகம பகுதியின் வழியாக கிறிஸ்து நாதர் ஏழ்மையைப் பற்றி என்ன கூறுகின்றார்.

04. வார்த்தையின் ஊழியருக்காக

- இறை அரசை உரிமையாக்கிக் கொள்வதற்கு ஏழ்மையை ஆசிர்வாதமாக கிறிஸ்து நாதர் வெளிப்படுத்தினார்.

- கிறிஸ்து நாதர் மனித உரு எடுத்து இவ்வுலகிற்கு வந்து மனிதனோடு ஒன்றிணைந்து வாழ்ந்த விதமாகவே, அதாவது உண்மையான மனித மகனாக வாழ்ந்த விதமாகவே இறை அரசில் எளியவர்களுக்கு இருக்கின்ற இடம் எத்தகையது என்பதை முழு வாழ்வின் வழியாகவே சாட்சி பகர்ந்தார்.
- **ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார் ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும்**….(எசாயா 61:1-2)

05. எம் பக்கம் :

- எமது தேசத்தினுள் இருக்கின்ற சொத்துக்களில் பெரும்பாளான பகுதியை ஒரு சில பேர் உரிமையாக்கிக் கொண்டு மிகவும் சௌகரியானமான வாழ்க்கை வாழ்பவர்கள் இருக்கின்றார்கள். மிகுதியான சிறு பகுதியை பெரும்பாளான மக்களுக்கு அனுபவிப்பதற்கு நேரிட்டு உள்ளது என்பது எமக்கு தெரியும். ஆகையால் வாழ்க்கையின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாமல் அநேகமானவர்கள் ஒதுக்கப்பட்ட நிலையை அனுபவிக்கின்றார்கள்.
- அப்படியானால் இறை ஆண்டவர் உங்களுக்கும் எனக்கும் என்ன கூறுகின்றார். அவரது பரிசுத்தமான திருவுளத்தை தேடுவதற்கு நிறைவேற்றுவதற்கு வல்லமையை வேண்டுவோம். மனம் வருந்தி மனதை புதுப்பித்து கொள்வோம்.

06. இறுதி செபம்: புபுது பாடல் இல. 208 “ஏழைகளே…”